**செய்தி வெளியீடு எண்:206** **நாள்: 13.04.2017**

**செய்தி வெளியீடு**

இன்று (13.04.2017) உயர்கல்வி தொடர்பாக ஆய்வுக்கூட்டம் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திரு. ராஜேந்திர ரத்னு, இ.ஆ.ப, மற்றும் அண்ணா பல்கலைக் கழக பதிவாளர் முனைவர். கணேசன் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்திய கல்வி நிறுவனங்களுக்கான 2016–17 ஆம் ஆண்டுக்கான கல்லூரிகளின் தர வரிசைப் பட்டியலில் (NIRF – National Institutional Ranking Framework) இந்திய சிறந்த பல்கலைக் கழகங்களின் பட்டியலில் 6வது இடத்தையும், இந்திய சிறந்த பொறியியல் கல்லூரிகளின் பட்டியலில் 8வது இடத்தையும், இந்திய ஒட்டுமொத்த பொறியியல் கல்லூரிகளின் பட்டியலில் 13வது இடத்தையும் அண்ணா பல்கலைக் கழகம் பெற்றதற்காக, அப்பல்கலைக் கழகத்திற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**